# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**232/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.அனுசியா | ஊர் | : | கோவிலடி |
| க.பெ. | : | திரு. ராகவன் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 85 | தொழில் | : | வயோதிகத்தால் வீட்டில் இருக்கிறேன் |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ஆம் நாள் **வா.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1ஆநூம் பிரதிவாதியால் 1.7.2020 தேதியில் என்னிடமிருந்து மோசடியாக எழுதிபெற்ற செட்டில்மெண்ட் ஆவணத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 5.2.2021 தேதியிட்ட தஞ்சாவுர் வருவாய் கோட்டாட்சியர் நக எண் 4776/2020/அ3 வழக்கில் பிறப்பித்த உத்தரவின் சார்பு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். 9.6.2023 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் WP(MD) No.6104/2021 ல் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 1.6.2020 தேதியில் திருச்சி அப்பல்லோ மருத்துவமனையில் எனக்குவழங்கபட்ட Discharge summary தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். திருச்சி நீரோஒன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருந்துசீட்டு தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். 19.8.1991 தேதியிட்ட நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6** ஆகும். 2.4.1997 தேதியிட்ட நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7** ஆகும். 1.3.2006தேதியிட்ட நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது மகள்

சரோஜா பெயரில் நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது மகள் செல்வி பெயரில் நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.10** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது மகள் ரமா பெயரில் நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.11** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது மகள் பிரேமா பெயரில் நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.12** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது மகள் சத்தியபாமா பெயரில் நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.13** ஆகும். 19.3.2021 தேதியிட்ட எனது 5மகள்கள் பெயரிலும் கூட்டாக நான் எழுதி வைத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.14** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.04 14:34:59 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**